# வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழு தலைவர் அவர்களின் உரை

வரலாற்று சிறப்பு மிக்க பெருநகர சென்னை மாநகராட்சி, வளர்ந்து வரும் மாநகரத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணம் 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

## நிதிநிலை

2025-2026-ஆம் நிதியாண்டின் வருவாய் கணக்கு தலைப்பில், வருவாய் வரவு ரூ.5145.52 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.5214.09 கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.3121.65 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.3190.61 கோடியாக இருக்கும்.

## வருவாய் கணக்கு

2024-2025-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.4464.60 கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ரூ.4987.09 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ரூ.5145.52 கோடியாக இருக்கும்.

2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4727.12 கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்த மதிப்பீட்டில் ரூ.5439.10 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2025-2026-ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.5214.09 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

## வருவாய் வரவினங்கள்

- **சொத்துவரி:** பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் இனங்களில் முதன்மையான பங்கு வகிப்பது சொத்துவரியாகும். 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.1900.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.2020.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **தொழில்வரி :** 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.550.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2025-2026-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் தொழில்வரியின் வருவாய் ரூ.600.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

- **முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி:** மாநகராட்சிக்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.350.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, 2025-2026-ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான வருவாய் ரூ.400.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- **மாநில நிதிக் குழு மானியம்:** 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி மாநில நிதிக்குழு மானியம் அரசின் வரித் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் வருவாய் ரூ.1063.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, 2025-2026-ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான மான்ய வருவாய் ரூ.1150.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## இதர வருவாய்

2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி, தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள், அங்காடி உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம் மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.1069.09 கோடி வருவாய் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இந்த வருவாய் 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.919.53 கோடி அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## வருவாய் செலவினங்கள்

- **பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்:** மாதாந்திர சம்பளம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியப் பயன்கள், பிற ஓய்வூதியப் பயன்கள், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு மாநகராட்சியின் பங்களிப்புத் தொகை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நேரடியாக நியமிக்கும் தற்காலிகப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற செலவினங்கள் 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டின்படி ரூ.2074.77 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினங்கள் 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.2232.21 கோடியாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- **நிர்வாகச் செலவு:** இச்செலவினத்திற்கென 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.299.83 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.297.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்:** பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்கச் செலவுகள், துப்புரவு பணிகளுக்கான செலவினம், திட்டச் செலவுகள், எரி பொருள் கொள்முதல் மற்றும் வாகனங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள்

கொள்முதல் போன்ற பல்வேறு செலவினங்களுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.1949.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.1864.44 கோடி அளவிற்கு செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **கடனுக்கான வட்டி செலுத்துதல்:** மூலதனப்பணிகளை மேற்கொள்ளுவதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக 2024-2025-ஆம் நிதியாண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.82.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.67.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மூலதன வரவுகள்

2024-2025-ஆம் நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின்படி மூலதன வரவு திருத்த மதிப்பீட்டில் ரூ.2548.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.3121.65 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## மூலதனச் செலவு

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மேற்கொண்டு வரும் மூலதனப் பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூ.2953.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் செலவினம் ரூ.3190.61 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## துறைவாரியாக 2025-2026 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள மூலதனத் திட்டங்கள்

- **பேருந்துசாலைகள் :** சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய தமிழ்நாடு அரசின் மான்யம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி மூலம் புதிய நிழற்குடைகள் அமைத்தல், பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்துதல், பேருந்து முனையங்களை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு விதமான பணிகள் பேருந்து சாலை துறையின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.304.85 கோடியும், 2025-2026-ஆம் நிதியாண்டிற்கு ரூ.628.35 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மழைநீர் வடிகால்வாய்கள்** : மாநில பேரிடர் தடுப்பு நிதி, கொசஸ்தலையார் பகுதி – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி (ADB), கோவளம் பகுதி – ஜெர்மன் வங்கி நிதி (KfW), மற்றும் பல்வேறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக மழைநீர் வடிகால் துறையின் கீழ் 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.1050.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.1032.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **திடக்கழிவு மேலாண்மை:** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி மற்றும் இதர பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.87.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.352.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **பாலங்கள்:** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.171.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.164.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **கட்டடம் :** பெருநகர சென்னை மாநகராட்சியில், NUHM திட்டம், சிங்கார சென்னை – 2.0 திட்டம், வடசென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மூலதன நிதி ஆகியவற்றினை கொண்டு நகர்புர சுகாதார மையங்கள், கழிப்பறைகள், வாகன இயக்கூர்தி நிலையங்கள் கட்டுதல், பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல், மாட்டுத் தொழுவம் அமைத்தல், அம்மா உணவகங்கள் மேம்படுத்தும் பணி மற்றும் பிற பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.185.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.413.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **தகவல் தொழில்நுட்பம்:** அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிப்பொறி, அச்சு கருவிகள், டிஜிட்டல் சர்வர்கள் மற்றும் வலைதள அமைப்புகள் உபகரணங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.11.59 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.9.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **மின்சாரம் :** பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்கும் பணி, மின்வடங்கள் புதியதாக மாற்றுதல், தகன மேடைகள் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான மின் ஆக்கிகள் (Generator) கொள்முதல் மற்றும் இதர பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.48.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.50.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்:** புதியதாக வீடியோ திரை அமைத்தல், மாநகரில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், வட்டார அலுவலகங்களில் கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குதல் போன்ற பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **இயந்திரப்பொறியியல் :** சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான கனரக வாகனங்கள் கொள்முதல், அலுவலர்களுக்கான மகிழுந்துகள் (Car), கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயந்திரம், மரம் வெட்டும் உபகரணங்கள் போன்றவைகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.32.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.22.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **கல்வி:** பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி, மின்னணு பலகைகள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.5.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **சுகாதாரம்:** பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைபரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தக்கூடிய புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.3.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.4.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மருத்துவ சேவைகள் துறை :** நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **சிறப்பு திட்டங்கள் :** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சீர்மிகு நகரத் திட்டம், சிட்டீஸ் திட்டம், நிர்பயா திட்டம், சிங்கார சென்னை 2.0 திட்டம், சென்னை மாநகர பங்களிப்பு (உலக வங்கி நிதி) போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.100.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.179.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்:** பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலங்களில் பூங்காக்கள், பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், விளையாட்டுத்திடல்களை அமைத்தல், உடற்பயிற்சி கூடங்களை அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.50.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.39.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மண்டலங்கள்:** தமிழ்நாடு அரசின் சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தமிழக அரசு மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள் மற்றும் இதர மூலதனப் பணிகளுக்காக மண்டலம் 1 முதல் 15 வரை அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 2024-2025-ஆம் நிதியாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ.899.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.279.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம் :** 2025-2026ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் :** 2025-2026ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயனுள்ள இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்த மாண்புமிகு மேயர்அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணைமேயர்அவர்களுக்கும், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் வடிவமைத்துக் கொடுத்த ஆணையர்அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி, வணக்கம்**

**திருமதி.சர்பஜெயாதாஸ்**
**தலைவர்**
**நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)**

சென்னை
2025 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2056
பங்குனி 5 –ஆம் நாள்